

மியாட் மருத்துவமனையின் 15ம் ஆண்டு நிறுவனர் தினவிழாவில், மகேஷ் நினைவு அறக்கட்டளையை சேர்ந்த அருணாவிடம் ₹10 லட்சம் நிதியை திரைப்பட இயக்குனர் ராஜீவ் மேனன் வழங்கினார். அருகில், குழும தலைவர் மோகன்தாஸ், மல்லிகா மோகன் தாஸ், பிரிதிவி மோகன்தாஸ், சிஷெல்ஸ் நாட்டு துணை ஜனாதிபதி டேனி பரே, பிரிட்டிஷ் துணை தூதர் பரத் ஜோஷி உள்ளிட்டோர்.

# மியாட் மருத்துவமனை 15வது ஆண்டு விழா

சென்னை, பிப்.13: மியாட் மருத்துவமனை 15வது ஆண்டு விழா நேற்று கொண்டாடப்பட்டது. இதில், வெளிநாட்டு தூதர்கள் கலந்துகொண்டனர்.

சென்னை ராமாபுரத்தில் உள்ள மியாட் மருத்துவமனையின் 15வது நிறுவன தினம் நேற்று கொண்டாடப்பட்டது. 1999ல் 100 படுக்கைகளுடன் தொடங்கிய இம் மருத்துவமனை தற்போது 1000 படுக்கைகள் கொண்ட மல்டி ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையாக மாறியுள்ளது.

ஆண்டு விழாவை மியாட் குழும தலைவர் டாக்டர் மோகன்தாஸ் தொடங்கி வைத்தார். அப்போது அவர் பேசுகையில், இங்கு 129க்கும் மேற்பட்ட நாடுகளை சேர்ந்த நோயாளிகளுக்கு நவீன தொழில்நுட்பம் மூலம் சிறந்த சிகிச்சை வழங்குவதாக தெரிவித்தார்.

சிஷெல்ஸ் நாட்டின் துணை ஜனாதிபதி டேனி பரே சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டார். மேலும், தான்சானியா, சூடான், ஜாம்பியா நாட்டு தூதர்களும், அமைச்சர்களும் கலந்துகொண்டனர். மியாட் நிர்வாகம் சார்பில், மகேஷ் நினைவு அறக்கட்டளைக்கு ₹10 லட்சம் நிதி அறக்கட்டளையை சேர்ந்த அருணாவிடம் வழங்கப்பட்டது.

கல்லீரல் மாற்று சிகிச்சை குறித்து டாக்டர் சுரேந்திரன், புற்றுநோய் சிகிச்சை குறித்து டாக்டர் ஸ்ரீகுமார் பிள்ளை, எலும்பு மஜ்ஜை மாற்று சிகிச்சை குறித்து டாக்டர் செழியன் சுபாஷ் ஆகியோர் படங்களுடன் விளக்கினர். குழும இயக்குனர் டாக்டர் பிரிதிவி மோகன்தாஸ் வரவேற்றார். மருத்துவமனை சாதனைகள் குறித்து டாக்டர் மல்லிகா மோகன்தாஸ் விளக்கினார்.

திரைப்பட இயக்குனர் ராஜீவ் மேனன், பிரிட்டிஷ் துணை தூதர் பரத் ஜோஷி உட்பட பலர் கலந்து கொண்டனர்.